



ஓலை 70 | ஓசை 192 | மே 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

## பொருள்

ஒழுக்கம், அதை உடையவர்க்குச் சிறப்பைத் தருவதால்
உயிரைக் காட்டிலும் மேலானதாக
அதைக் காக்க வேண்டும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# நன்றிக்கடன்

## பாவகை : அடுக்குத்தொடர் வெண்பா

அணியணியாய் தந்தே அணியணியாய் ஆக்கி
அணிஅணியாய் செய்தார் அணிஅணியின் தன்னில்
கணிகணியாய் மாற்ற கணிகணியும் ஏற்றி
மணிமணியாய் போற்றிடும் மாண்பு

அணி - இலக்கண அணி / அழகு / ஒழுங்கு / கூட்டம்
கணி - அறிஞன் / கலை
மணி - ஒளிவீசும் கல்




- மரபுப்பாவினையும்
- யாப்பிலக்கணத்தையும்
- சிறுகதையும்

இலவசமாக பயிற்சி அளித்துவரும்
நெருப்பலையார் ஐயாவை
அகரமுதல இலக்கியப்பேரவை
சார்பாக வாழ்த்துகிறோம்

*கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்*

# பார்வையில்...



தாயை தெய்வமாய் மதிக்கிறேன்.
தகப்பன் பேச்சு மந்திரமென்றிருக்கிறேன்.
குரு வணக்கம் மறந்ததில்லை.
உடன் பிறந்தோரின்
உரிய கடமைகளை
செய்யத் தவறியதில்லை.
உறவுகளை அணைத்தவனின்றி
பிரித்தவனில்லை.
நட்பை மதித்ததின்றி மிதித்ததில்லை.
புறங் கூறியதில்லை.
முகஸ்துதி பாடியதில்லை.
பிறர் மனம் நோகப் பேசியதில்லை.
யாசிப்பவர்க்கு இல்லையென்று
சொல்லியதில்லை.
மரியாதை நிமிர்த்தங்கள் பிழறியதில்லை.
வாக்கு மீறியதில்லை.
அன்பு செலுத்த மறந்ததில்லை.
வயோதிகரை தூற்றியதில்லை.
கோபமாய் கூச்சலிட்டதில்லை.
உயர்வு தாழ்வு பேதம் பார்ப்பதில்லை.
நேர்வழி தவிர வேறுவழி போவதில்லை.
கருணையை துளியும் குறைத்ததில்லை.
ஒருவரையும் ஏமாற்றியதில்லை.
யாருக்கும் துரோகமிழைப்பதில்லை.
தலைபோகும் காரியத்திற்கும்
பொய் பேசுவதில்லை.
தர்மத்தை தள்ளி வைப்பதில்லை.
களவுக்கு துணை போவதில்லை.
நீதியைப் பழிப்பதில்லை.
வறுமையிலும் தடம் மாறுவதில்லை.
தன்னம்பிக்கையை இழப்பதில்லை.
உழைக்காமல் உண்பதில்லை.
கடவுள் கைவிடுவாரென
ஒரு நாளும் நினைப்பதில்லை.
நான் எப்போதும் இப்படித் தான் .
ஏனோ சமூகத்தின் பார்வையில்
நான் பிழைக்கத் தெரியாதவன்.

*கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்*

# செர்ரி பூக்கிறது

ஒட்டடைகள் இல்லா
ஜன்னலின் இடையில்
முகம் நுழைத்த
மழை வாசனை
பழைய மரப் பெட்டகம்
ஒன்றில்



சிவப்பும் வெள்ளையுமாய்
செர்ரி மலர்கள்
பூத்துக் குலுங்கும்
புடவை அது

விரல்களின் இடையில்
ஊசிகள் விளையாட
முந்தானையில் அவள்
செர்ரி பதியமிட்டாள்

எனக்கான
நினைவுகளின்
சேமிப்பு கிடங்காய்
மரப்பெட்டகம் ஒன்று
அதை பத்திரப்படுத்திக் கொண்டது

ஒட்டி உதிரும் இலைகளின்
பருவகால மாற்றங்களில்
மாறாத செர்ரி தோட்டத்தின்
சொந்தக்காரியாய் நான்

பெட்டகத்தின்
ஒவ்வொரு திறப்பிலும்
அவளை நான்
சுவாசித்துக் கொண்டிருக்கிறேன்

இப்போதும் கூட
ஒவ்வொரு சந்திப்பிலும்
கருவறையின் கதகதப்பை
உணர்த்திக் கொண்டே இருப்பாள்

எனக்கான வசந்த காலத்தில்
செர்ரி பயிரிட்டவள்

இனிய அன்னையர் தின நல்வாழ்த்துகள்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# கானல் நீர்

தூரத்தில் நீர்
துரத்த கானலாய்.
பார்க்கத் தெரியும்
பருகிட முடியாது.

மாயையாய்த் தோன்றி
மயங்கச்செய்யும்.
பொய்யான உடல்
மெய்யாய் நிற்பது.

மெய்யில் உயிராய்
மூச்சுக் காற்று.
நிலையாமை ஒன்றே
நிலைத்து நிற்பது.

நம் வாழ்க்கையும்
நிலையா வாழ்க்கை.
கானல்நீராய் வாழாமல்
காட்சிக்கு வசமாவோம்.

வாழும் போதே
வள்ளலாக வாழ்ந்திடு.
இருப்பதை நாளும்
இரப்போர்க்கு ஈந்திடு.

உழைத்து வாழ்ந்திடு
உழைப்போர்க்கு உதவிடு.
வறுமையில் செம்மையாய்
வாழ்ந்து பார்த்திடு.



அறநெறி வாழ்க்கையில்
அன்போடு பழகிடு.
பணத்தைத் தேடி
பரிதவித்து ஓடாதே.

பொருளுக்காய் வாழாதே.
பொறுப்பாய் வாழ்ந்திடு.
இருப்பது பொய்
போவது மெய்

இன்னா செய்தார்க்கு
இனியவே செய்திடு.
நல்லவை நினைத்திடு
அல்லவை ஒதுக்கிடு.

கானலாய் வாழாமல்
கடலாய் வாழ்ந்திடு.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர்அணை

# உழைப்பாளி

உதிரத்தை உழைப்பாக்கி
உலகத்தை உயர்விக்கும்
உழைப்பாளியே!



கரங்கள் இணைந்திட
கடும் உழைப்பால்
வாழ்வின் வெற்றிக்கு
ஆதாரத்தின் பிரம்மாவே.

வேர்வையை சிந்தியே
உடலின் உதிரத்தை உழைப்பாக்கி
உலகத்தை உயர்விக்கும்
உழைப்பாளியே.

அதிகாலை ஆதவனும்
அதிரும் வண்ணம்
அதிக மகசூலிற்கான
அடித்தளமான விவசாயியே.

எத்தனை இடர்வரினும்
என்கடன் பணியே
என்றெண்ணியே வேலையில்
என்றும் கருத்தானவரே.

அல்லி மலருக்கும்
அயர்ந்திட கணங்களுண்டே.
அயராதேபணி செய்யும்
அன்பருக்கோ அயர்ச்சியுண்டோ?

உழைப்பின் உன்னதத்தை
உலகிற்கே எடுத்தியம்பும்
உயர்வான மன்னவனே
உணர்வுகளின் ஒளிவிளக்கே.

கலங்கரை விளக்கமோ
கடலில் பயணிப்போருக்கே.
கலங்கா பணியாளனே
உலகிற்கே வழிகாட்டியன்றோ?

பயணங்களை ஆச்சரியமாய்
பாதைகளை பத்திரமாய்
பல்வேறு உழைப்பால்
பாங்காய் நின்றவனே.

உம் பாதம்
தொட்டே பணிகின்றோம்
நின்பணி தொடர
சிறக்கட்டும் நல்லுலகே.

வீரவணக்கம் சொல்கின்றோம்
வீரமான உழைப்பாளிகளுக்கே.
வீணாகாதே தங்களின்
விண்ணகத் தொடல்களே.

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# விடியலின் துடிப்பே



விடியலாய் வந்த
விழைவின் துடிப்பே

கார்குழல் காரிகையே
தேன்சுவை தேவதையே

மான்விழி மங்கையே
பாய்ந்தோடும் கங்கையே

மனதில் நிறைந்தவளே
மாற்றமதைத் தந்தவளே

ஆசைகள் ஊற்றெடுக்க
அரவணைத்து மகிழ்ந்தவளே

இன்பத்தின் நாயகியே
இதழ்களை நனைத்தவளே

முத்தத்தின் ஈரத்தில்
இதயமும் குளிர்ந்ததே

ஆனந்தமும் அருவியாய்
ஆர்ப்பரித்து வருகிறதே

சிறுநடையில் சிந்தையும்
சிதறுதடி உன்னாலே

நினைவுகள் நிழலாய்
தொடர்கிறது பின்னாலே

புன்னகையில் புதைந்தே
பூபாளம் இசைக்கிறாயே

புத்துணர்வு வருகிறதே
கானமாய் ஒலிக்கிறதே

அன்பில் திளைத்திட
இதயமும் இதமானதே

பனிமலரின் நீர்த்துளிகளாய்
மேனியில் பொழிகிறாயே

என்னுயிர் சிலிர்த்திட
உறவாகிக் கலந்தாயே

விடியலில் வந்தே
விழைவின் துடிப்பானாயே

வசந்தத்தின் வரவாய்
வாழ்வில் இணைந்திருப்பாயே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# ஆற்றுத் திருவிழா

மாயவன் கூடல் நகர் காண
வேனில் வைகறையில் புறப்பாடு
வழிமறித்து வழிப்பறி செய்து
விழியொளி இழந்தான் கள்ளன்
விண்ணளந்தான் திருவடி பணிந்து
தீ வினை போக்க உடன்படிக்கை
காணிக்கை செலுத்தும் கள்ளர் குடி
ஆறலைத்தல் கள்வர் மனம் திருந்த
ஆற்றில் இறங்கினான் ஆளவந்தான்!




கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# சர்ப்பச் சரடு

மனதுள் சுரக்கும் மென் மயக்கம்
அறியச் செய்கிறது
இல்லாததை இருப்பதாய்.
இருளுடனான பயணத்தில்
தட்டுப்படும் சரடு
அச்சத்தை ஏற்றியபடி
மனதுள் நெளிகிறது
சர்ப்பமாய்.
ஒளியின் வீச்சால்
காட்சி தெளிவுறுகையில்
சர்ப்பத்தின் நெளிவுகளால் நின்று
சுருண்டு கொள்கிறது சரடு.
சர்ப்பம் தெரிகையில் சரடும்
சரடு புலப்படுகையில் சர்ப்பமும்
யதார்த்தத்தை கலைத்து கலைத்து
உருவாக்குகிறது மாயையை.
எப்போதும் ஏதேனும் ஒன்றுடன்
உறைந்திருக்கும்
பொருள்வயமான உண்மை
ஒவ்வொரு முறையும்
ஒரு அறிதலை மட்டுமே
வெளிப்படுப்படுத்திக் கொண்டிருக்கிறது
உண்மையுடன்.



கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

# மனமே உனக்கென்ன ஆனதோ

ஏன் சோர்ந்து போகிறாய்
சட்டென்று
தொட்டாச் சிணுங்கியாய்
தோற்று போனதாக உணர்ந்தாயோ ?
வெறுத்து போனதாக நினைத்தாயோ ?
அசதியாக நினைத்தாயோ ?
அலாதியில் தோன்றியதை பெற்றிட
முடியாத பணத்தின் முக்கியத்துவம் கண்டு
கவலைக் கொண்டாயோ ?

ஆசைகள் நிராசையாகலாம்
ஆசைகள் மாறலாம்
வழிகள் பெரிதாகுவதில்லை
இலட்சியத்தோடு எம்மோடு ஊர்ந்திடும்
உணர்வில் பயணித்திடும் திறமையொன்றை
அடைந்து அடையாளப்படுத்திட முடியாது போகிறபோது
தானே தோற்றதாகிடுதே !
துவண்டுதான் போகிறது எம் எண்ணம்
பாரினிலே பாவியானதைபோல உணர்கிறதே
என்ன செய்வதோ எமக்கென்று எமதாகிடும்
உறவொன்று இல்லாமலோ
சோர்ந்திடும் போது உணர்ந்து தட்டித்தந்து
கடந்திடு என்று சொல்ல யாருமில்லாததோ
ஏனாகி போகிறதோ வலிகள்
ஓடி ஒழிய வழியேதுமில்லை
வலிகள் இல்லையென்று விட நான் மலக்குமல்ல
மனிதகுலத்தில் பிறந்தேன் மானிட பிறவியெடுத்தேன்
மாயஜாலமாகிறது கனவுகள்
கனவுகள் தீர்க்க வழிகள் பணத்தின் முற்செடிகள்

அலறி துடிக்க வேண்டும்
கதறி துடிக்க வேண்டும்
உலறி துடிக்க வேண்டும்

கனா தீரும் ஓர் நாள் அந்நாளை காணவே
காயம் மாறா வடு நெஞ்சை தீண்டுதே

காத்திருக்கிறேன் காலம்
கைக்கொடுக்கும் நாளை எதிர்ப்பார்த்து



கவிஞர் சஃஹ்னாஸ் பேகம், புத்தளம் (இலங்கை)

# அன்பு உறவு

அது என்னவோ
அசாத்திய நிர்வாகிகளால்
அலுவலக சந்திப்பு,
அடித்தள பணியாளனை
அடித்து நொறுக்க கேள்வி கேட்டு
அப்படியே தலைகுனிய வைப்பதற்கு,
அதையே குடும்ப சந்திப்பு போல
அதீத வேலை செய்பவரை
அன்போடு தட்டிக்கொடுக்கலாமே,
அசாத்திய திறமை கொண்டவரை
அசத்தல் மன்னன் பட்டம் தரலாமே
அடித்தளத்திலிருந்து வருபவரை
அசல் வழிகாட்டியாக கை கொடுத்து
அம்சமாக வேலை வாங்கலாமே,
அவர்கள் ஒவ்வொருவரும் உங்கள்
அன்பு உறவுகளாக நினைத்திட்டாலே!



கவிஞர் நீலாசுபாஷ், ஆத்தூர்

# வானமே எல்லை



சிறகை விரித்துப் பறந்திடு பெண்ணே!
நெருப்பில் முக்கி எடுத்தாலும்
அடக்கி ஆளும் ஆளுமை படைத்த ஆண்களின்
வல்லமையின் முன்னே
பீனிக்ஸ் பறவையாகச்
சிலிர்த்து எழவேண்டும்!.
மலையில் இருந்து விழுந்தாலும்
நீர்வீழ்ச்சியாய் விழ வேண்டும்!
வானத்து நிலவாக உவமைப் படுத்த
நீயோ விண்வெளியில்!
சாதனையின் உச்சத்தில் பெண்கள்!
அந்த உயரம் தொட
பெண்ணே உனக்கு
வானமே எல்லை!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# கரம் கோர்த்த காரிகையே

கரங் கோர்த்தக் காரிகையே
என்கதை கேள வாராயோ?
மரமாக நான் இருக்க - என்
மறமாக நீ வந்தாய்.

வாழ்வென்ன தெரியும் இக்கடுவனுக்கு?
போக்கென்ன அறிவன் இப்பொடியனிவன்?
உரைத்த வாயெல்லாம் இன்று - இன்சொல்லை
பறை அறைந்து விளக்குதடி.

உத்தமியாம் உன்முகம் காண
எத்தவம் தான் செய்தேனோ?
எத்தவறு நீ இழைத்தாய் - இந்த
மா தன்னை மனிதனாக்க ?

யான் இழைத்த கருமம்
எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து
இறை அளித்த இறைவியாய் - என்
திரு மகளாய் வந்தாயே.

காகிதம் இன்று காற்றாடி
தகரம் இன்று தங்கம்
என்ன சொல்ல நானும் - உன்
வரவன்றோ என் வரம் ?

பெண் என்றால் சிறியவள்
என்று சொன்னவன் எவனோ?
இப்பெண்ணன்றோ இந்த கல்லை - இன்று
நல் சிலை யாக்கினள்.

கரம் கோர்த்த காரிகையே
என்கரம் விட்டு நீங்குவாயோ?
இருந்தாலும் பிரிந்தாலும் நீ -இருக்கும்
உபாயம்தான் இளையவன் அறிவேனே

என்ன எல்லாம் சொல்ல
எல்லாம் தந்த உன்னை?
கன்னிகையே காரிகையே
மாயமந்திரியே - என்
கன்னித் தமிழே பராபரமே!

கவிஞர் சி. வே. முத்துச்செழியன் (எ) மு. வேதப்பிரிசி, மதுரை

# தாலாட்டுதே வானம்

தாலாட்டுதே வானம் அம்மாவின் அன்பில்
நித்திரை வருதே வேப்பமரக் காற்றில்
தென்றலும் தாலாட்ட அன்னையும் பாலூட்ட
மனமெல்லாம் மகிழ்ச்சியில் ஊஞ்சலாடிச் செல்ல
கொஞ்சி பேசும் சிணுங்கல் கேட்க
என்னுயிர் அம்மா உன்னோடு நான்
இருக்க வேறு எதுவும் வேண்டாமே
காலமெல்லாம் நன்றி உணர்வோடு வாழும்
எனக்கு உயிர் தந்த தேவதையே
உன்னை நாளும் வாழ வைப்பேன்
உனது அன்பிற்கு எல்லை இல்லை



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# உன்னைப் பார்த்ததும் பிடித்தது

எல்லோருக்கும் எல்லோரையும் பிடித்து விடாது
உன்னை பார்த்ததும் பிடித்தது

ஒருமுறை உன்னை பார்த்தேன் பலமுறை ரசித்தேன்
நீ யார் என்று தெரியாது உன் பெயர் கூட சரியாக தெரியாது

உன் அமைதியான முகம் என்னை கவர்ந்தது
உன்னோடு பேசிவிட வேண்டும் என்று அடிக்கடி தூண்டியது

நிலைகுலைந்து அலைகின்றேன் உன் அனுமதி இன்றி
உனக்காகவும் எழுதுகிறேன்
நீ எப்போது பேசுவாய்
எனக்காக எப்போது நேரம் ஒதுக்குவாய் ஒன்றும் தெரியாது

உன்னைப் பற்றி அறிந்து விட ஆவலாய் உள்ளது
உனக்காக சில வரிகள் எழுதிவிட ஆசையாக உள்ளது

என் ஆசையும் நிறைவேறுமா? இல்லை நிலை குலைந்து போகுமா?

கவிஞர் சாதீக் பாத்திமா சமீஹா, மூதூர் (இலங்கை)

அயல்நாட்டு கடற்கரையில்
அலையோடு விளையாடும் குருவி
குழந்தையின் ஞாபகம்.



கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், துபாய்

# தனிமை

உறவாக வந்ததெல்லாம்
உயிராக இருந்திடுமா?

உயிராக இருப்பதெல்லாம்
பிரியாமல் இருந்திடுமா?

புரியாத வார்த்தைகளில்
புதினங்கள் வரைகின்றேன்.

புலம்பிய தத்துவத்தை
புலனத்தில் பகிர்கின்றேன்.

தனிமையில் வந்தவர்கள்
தனிமையில் இருப்பதில்லை.

துணையாக இருப்பவர்கள்
துன்பத்தில் கலப்பதில்லை.

உணர்வுகளால் உள்ளங்கள்
உடைந்துதான் போவதுண்டு.

கண்ணீரால் கவலைகள்.
கண்விட்டுப் போவதுண்டு.

எவருமில்லா உலகத்தை
எங்கெங்கோ தேடுகிறேன்.

தேவனவன் தந்துவிட்டால்
தேடலினை முடித்திடுவேன்.

வாடையிலே வாடிவாடி
வாழ்க்கையை வெறுத்துவிட்டேன்.

போனவரைத் தேடியினி
போவதில்லை முடிவெடுத்தேன்.

தனிமையிலே இனிமைகாண
தரணியெங்கும் அலைந்துவிட்டேன்.

போதிமர நிழலினிலே
புத்தனாக அமர்ந்துவிட்டேன்.

உறவுகளை துறந்தினிமேல்
நூல்களையே நாடிவிட்டேன்.

புதிதான உலகத்தை
தேடியின்று சேர்ந்துவிட்டேன்.

கவிஞர் கோ. தினுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# வெயிலோன்

கடுங் கோடையின் அனல்மிகு
நள்ளிரவில் யாருமறியாது வந்திருந்த
தேவதை  வாடித்துச் சென்ற
முத்து சிதறல்கள் வாழையிலையில்
தடம் பதித்து காத்திருந்தது
வெயிலோனின் தாகம் தணிப்பதற்கு.



கவிஞர் சாந்தாதேவி, சென்னை

# விதிவிலக்கு



நான்
உன்மீது கொண்ட
பாசம்,
வித்தியாசமான
விதிவிலக்குதான்.

கவிஞர் பெ. சுரேகா, திண்டுக்கல்

11. பாத்திரம் பெற்ற காதை
தெய்வம் சென்ற பின் மணிபல்லவத் தீவில் தனித்து இருந்தாள்
மெய்யான மணல் குன்றுகள், பூஞ்சோலை பொய்கை கண்டாள்
தையல் தீவைச் சுற்றிப் பார்த்து ரசித்தபடி காலாற நடந்து வந்தாள்.
தெய்வமகள் அவள், தீவதிலகை மணிமேகலை முன் தோன்றினாள்

1, மணிமேகலை பதில் .
"மரக்கலம் கவிழ தப்பி வந்தவள் போலிருக்கும் நீ யார் ? "தீவதிலகை
"வரமான முற்பிறப்பில் இராகுலன் மனைவியாக இருந்தேன் நான்
தரமான இப்பிறவியில் நான் நடன மாது மாதவி மகள் மணிமேகலை
கரம்பிடித்த மணிமேகலா தெய்வத்தால் இங்கு வந்தேன், நீ யார்?"




2. தீவதிலகை பதில்
"இந்திரன் கட்டளைப்படி புத்த பீடிகையை காவல் புரிந்து வருகிறேன்
இந்த பீடிகையை வணங்கிச் செல்வோர் முற்பிறப்பினை அறியலாம்
விந்தையான இத்தீவுக்கு வந்துசெல்வோர் உயர்ந்தோரே ஆவர்
வந்திருக்கும் உனக்கு சில கடமைகள் உண்டு கூறுகிறேன் கேள்."

3. கோமுகி
"இப்பீடிகை முன் ஒரு அழகிய குளிர்ந்த நீர்ப் பொய்கை உள்ளது
அப்பொய்கையின் பெயர் கோமுகி. இது ஒரு அதிசயப் பொய்கை
இப்பொய்கையில் வைகாசியில் அமுதசுரபி வெளிப்பட்டுத் தோன்றும்
அப்பெரும் நாள் இன்று கூடி வந்துள்ளது வைகாசி விசாக நட்சத்திரம்".

4. அமுதசுரபி
"புரிந்துகொள் புத்தர் பிறந்தது, ஞானம் பெற்றது வைகாசி விசாகம்
அருமையான வைகாசிதூய நிறைமதி நாள் இன்றுதான் உணர்க
பெருமைமிக்க இப் பொய்கையில் அமுதசுரபி வெளிப்படும் இன்று
தருமமிகு அப்பாத்திரம் ஆபுத்திரன் கையில் இருந்தது அறிவாயா?"

5. போற்றி
அப்பாத்திரம் மணிமேகலை சிவந்த கைகளில் சென்று புகுந்தது
எப்பொழுதும் மக்களை அன்புநெறியில் நடத்தும் புத்தனே போற்றி
இப்பவும் கூறுவேன் அறிவுக்கண்ணைத் திறந்த புத்தனே போற்றி
தப்பேதும் செய்துவிடாமல் பசிப்பிணி போக்க வந்த புத்தனே போற்றி

6. பசிப்பிணி
"உலகிலேயே சிறந்த அறம் கடும் பசிப்பிணி போக்குவதேயாகும்
பலகாலம் வாழ்ந்த மெய்ஞானிகளின் தீர்ப்பும் இதுவே யாகும்
சிலகாலமே வாழும் மனிதன் இதை உணர்ந்து வாழ்வதில்லை
நிலம்தரும் உணவு எல்லோருக்கும் பொது என்பதே அமுதசுரபி

7. அட்சயப்பாத்திரம்
நல்லறத்தை விதைத்து செல்வந்தராக வாழ்வார் இப்பிறவியில்
அல்லவை செய்து பசிப்பிணியால் அல்லாடுவர் இப்பிறவியில்
எல்லா நேரமும் அமுது சுரக்கும் தன்மையுடையது இப்பாத்திரம்
இல்லாமையை அகற்றி ஏழ்மையை நீக்கவல்லது இப்பாத்திரம்

அறமே சான்றாக அருள் சுரந்து ஊட்டும் சிறப்புடையது அறிக
திறமை அறிந்து உன் கைகளில் அடைக்கலம் ஆகியிருக்கிறது
மறந்து விடாதே உன் பிறப்பின் அருமையை என்றது தீவதிலகை
சிறப்பான அமுதசுரபியுடன் தன் நகர் சென்றாள் மணிமேகலை

...தொடரும்

கவிஞர் ந. திருக்காமு

# நான்

விசித்திரமானவள் நான்
சிலருக்கு கோபகாரியாக
சிலருக்கு திமிர்பிடித்தவளாக
சிலருக்கு ஆறுதல் கூறுபவளாக
சிலருக்கு அழுகுநியாக
சிலருக்கு நிராகரிக்கபட்டவளாக
பலருக்கும் புதிரானவளாக
ஆனால் எனக்கு மட்டும்
தெரியும் என்னை.



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை



அகர முதல

# அவள்

அவள் என்றால் இவளுக்கு
அலாதி பிரியம்
அவள் இவளின்
அச்சம் போக்கியவள்
அவள் இவளின்
தயக்கம் தகர்த்தவள்
அவள் இவளுக்கு
தெளிவினை ஊட்டியவள்
அவள் இவளுள்
நம்பிக்கையை விதைத்தவள்
அவள் இவளை எந்நிலையிலும்
விட்டுக் கொடுத்திடாதவள்
அவள் இவளின்
ஆறுதல்
அவள் இவளின்
அன்பிற்குரியவள்
அவள் இவளின்
அன்னை மடியானவள்
அவளே இவளை
மெருகேற்றியவள்
அவளே இவளுக்கு
அனைத்துமானவள்




கவிஞர் அகல் தாமரை 'கவி', கமுதி

# இறைவன் வரைந்த ஓவியங்கள்

பூவைக் குடைந்து
புதினங்கள் படைத்திட
படைத்தவன் மட்டுமே சிற்பி.
நம்மால் ஏது முடிகிறது.
நட்டு ரசிக்கத்தானே முடிகிறது.

அரும்பினுள்ளேயும்
அற்புத வரணங்கள் கலந்திட
ஆண்டவன் மட்டுமே கலைஞன்.
நம்மால் ஏது முடிகிறது.
நட்டதை வரையத்தானே முடிகிறது.

இயற்கை மை பூசிட
இதழ்களில் வாசனை பரப்பி
வரைந்தவன் அவனே ஓவியன்.
நம்மால் ஏது முடிகிறது.
நயந்து பாடிடத்தானே முடிகிறது.




புல்லிக்குள் பூவிதழ் நுழைத்து
அல்லிகளாய் விரித்திட
ஆக்கியவன் மட்டுமே அறிஞன்.
நம்மால் ஏது முடிகிறது.
அழகை ரசிக்கத்தானே முடிகிறது.

புல்லுக்குள் தாளை வைத்து
பூதளத்தின் பசுமை காத்திட
படைத்தவன் மட்டுமே நெறியாளன்
நம்மால் ஏது முடிகிறது.
நடந்து மிதிக்கத்தானே முடிகிறது.

பூச்சிகளைக் கவர்ந்திட
பூந்தளிர் நா நீட்டிக் கவர்ந்திட
சூலகத்தின் சூட்சுமங்கள்
சூழ்கொள்ளச் செய்பவனே உரிமையாளன்
நம்மால் ஏது முடிகிறது.
படம் பிடித்துப்போடத்தானே முடிகிறது.

கவிஞர் செண்பகச் சோலையாள், ஆயிஷ்

# நட்பு

அழகிய பள்ளிப் பருவத்திலேயே
நட்பை தெரிந்து கொண்டேன்.
நட்பு என்றதை விடாமல்
காத்துக் கொண்டேன்.

ஆண் பெண் என்று
பார்க்காமல் பழகினோம்.
பாலினத்தை பார்க்காதீர்கள்
என்று சொல்கிறோம்.

உயிருக்கு உயிராய்
உயிர் நட்பாக பழகின்றோம்.
பிரச்சனை என்று வந்தால்
உடனே வந்து நிற்கின்றோம்.

சிறந்த உறவாக
விளங்குகிறது நட்பு
அனைத்துலுமே
நட்பாக போற்றுகின்றோம்



கவிஞர் ஷர்மிளா செந்தில்குமார்

# மறக்க முடியாத நினைவுகள்

வெள்ளாறு ராஜன் வாய்க்காலை கடலாய் பாவித்து
இக்கரையில் இருந்து அக்கறை கண் சிவக்க நீந்தும்
அந்த நாள் நினைவு மறக்க முடியவில்லை.

மழையில் நனைந்து கொண்டே பயணிக்கும்
அந்த நாள் நினைவு.

போதி சுமக்கும் கழுதையாய்
மனம் வேதனையில் வாடும்போது
அம்மாமடி குட்டித்தூக்கம் காணாமல் போகும் கவலைகள்.

மறந்து போன மார்கழி மாத தூக்கத்தை கலைக்கும்
அதிகாலை கோவில் மணி ஓசை.

பழைய சோறு பச்சை மிளகாய் சின்ன வெங்காயம்
அரிதாய் போன அமுதம் அந்த நாள் மறக்க முடியவில்லை.



அப்பாவின் தோலில் ஏறி ஆகாயம் தொட்ட
அந்த நாள் மறக்க மறக்க முடியவில்லை.

அப்பா ரசிக்கும் சிவாஜி படம் அதனாலேயே
நானும் ரசித்து சுவாசித்த நினைவுகள்.

கவிஞர் கண்ணதாசனின் வைர வரியான
'வானும் கடல் மண்ணும் மறந்து பிரிந்தாலும்'
மறக்க முடியாத நெஞ்சம் நிறையும்
அந்த நாள் நினைவுகள் மறக்க முடியவில்லை.

கவிஞர் ஜேப்பி (ஏ) பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# வாடகை வீடு

வீடு
நமக்கு சொந்தமில்லாவிட்டாலும்
அதில் நிறைந்திருக்கும்
நினைவுகள்
நமக்கு சொந்தமானவைதான்.



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# மீதம் இருக்கும் சொற்கள்

விரிசலில் சேதமின்றி
மீதம் இருக்கும் சொற்கள்
ஒரு மௌனத்தின் பின்னே
கரையேற துடித்துக் கொண்டு
மீன்கள் போல் துள்ளித்துள்ளி
வெளியேறக் குதித்து.
மீண்டும் மன ஆழியில்
விழுந்து அடங்கிப் போகும்.



அழுவது இலகுவானது
சிரிப்பதும் இலகுவானது
மறப்பது கடினமானது
விலகுதல் அதைவிட கனமானது
மீந்த சொற்களைச்சுமப்பது.
அதை விடவும் கனமாக.

பாறைகள் விலக
பாதையை அறிய
புரிதல் தெரிய
புதிதாகப் பூக்க
பூலோகம் துளியாக
பூவிழி பிரபஞ்சமாக
பிரியங்கள் பிரவாகமாக
பேதலிப்புகள் காணாமலாக
தெளிதல் துளிர்க்க
திரும்பவும் நேசிக்க உதவிடும்.
விட்டதிலிருந்து
மீதமான சொற்கள்!

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# தாலேலோ...தாலேலோ...

ஆடி வந்த அன்னமே
நாடி வந்த நல்லிசையே
தேடி வந்தப் பைந்தமிழே
பாடி வந்தப் பசுங்கிளியே (தாலேலோ

கோடி முத்தங் கொடுத்தாலும்
வாடி நீயும் சிணுங்கலாமா
வம்புக்கு அழலாமா - என் ஐயா
தெம்பு கொள்ள வேணாமா (தாலேலோ



அம்மா அமுதூட்ட
அழகு வாய்த் திறப்பாயோ
புண்ணியனார் அமுதூட்ட
பூஞ்சிட்டே வாய் திறப்பாயோ (தாலேலோ

பாட்டி அமுதூட்ட
பவள வாய்த் திறப்பாயோ
அத்தை அமுதூட்ட
தத்தை வாய்த் திறப்பாயோ (தாலேலோ

திறந்த வாய்தனிலே
கண்ணே பூலோகம் தெரியுதே
பூலோகம் மீதினிலே
பொன்னே எண்திசை விரியுதே (தாலேலோ

கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜ், பட்டாபிராம், சென்னை

# எங்கே நிம்மதி?

நிம்மதி தேடி நாள்தோறும்
அலைந்திடும் அன்புத் தோழர்களே
உன் மதிக்குள்ளே ஓர் சேதி
உறைத்திடவே நான் வந்தேன்
பன்மடங்காக கவலைகளை
பத்திரமாக சேமித்தாய்
நடந்தது ஓர்நாள் என்றாலும்
நாளும் புலம்பி அதை வளர்த்தாய்
சின்னத் தவறை சீராட்டி
சிகரத்தைப் போலே வளர்த்துவிட்டாய்
குறைகளை மட்டுமே கண்டறிந்து
குவியல்களாக குவித்து வைத்தாய்
சாக்குப் போக்கு இரண்டோடும்
சகோதரத்துவம் வளர்த்துக் கொண்டாய்
இத்துனை தடைகள் இருக்கையிலே
எப்படி நிம்மதி உனை அணுகும்
குப்பைத் தொட்டியை கவிழ்ப்பது போல்
இக்குணங்களை உடனே கவிழ்த்து விடு
குறுக்கு வழியில் நிம்மதியை
கூப்பிட வழி ஒன்று கூறுகிறேன்
ஈர நிலத்தில் பயிர்களெல்லாம்
என்றும் செழிப்பாய் வளர்ந்து விடும்
பசுமையான நிலப்பரப்பே
பலனை அள்ளித் தந்துவிடும்
மகிழ்ச்சியான மனநிலையே
மாற்றத்தினுடைய ஊற்றுக்கண்
நிலையாய் மகிழ்ந்த மனநிலையை
நிறுத்தி மட்டும் நீ வைத்தால்
நிம்மதி உன்னைத் தேடி வரும்
நிரந்தரமாக குடியமரும்



கவிஞர் அ. தினசேகரன், அருளவாடி, விழுப்புரம் மாவட்டம்

# இழப்பின் வலி

எவ்வளவு காலங்கள் ஆயினும்
இழப்பிற்கான இழப்பீடு
எதுவொன்றையும் சமன் செய்யாது

காலத்தின் கீறல்களில் இழப்பின்
வலியை வழியில்லாமல் கடக்கலாம் -ஆனாலும்
ஆகச்சிறந்ததொரு உறவின் இழப்பு
நாளுக்கு நாள் உருக்குலைக்கும்

யாரின் தேறுதல்களும் அவ்வளவு
எளிதாய் ஆற்றுப்படுத்திடாது
நொடிப்பொழுதில் உடைந்து
உருக்குலைந்து அப்படியே செயலற்று
போகுமளவு பேரிடியாய்
மனம் வெடித்துக்கொண்டிருக்கும்

உறவின் உயிர்ப்பைத் தேடும்
அங்கேயே நிலை குலையும்
கண்ணீர்த் துளிகளில் நினைவைத்
தூறிக் கொண்டு இருக்கும்

வயதோ வாழ்வோ எதுவாயினும்
தமக்கென உறுதுணையாய் இருந்தவரின்
இறப்பு உணர்த்திடும் இருத்தலின் அடையாளத்தை!

எத்தனை நாட்கள் தாண்டிடினும்
தீரா வலி தீப்பொறியாய்
வெடித்துக் கொண்டேயிருக்கும்
அந்த புன்னகையைத் தேடி
அதில் அன்பைத் தேடி
பயணிக்கும் நினைவுத்தூறலுடன்!

இழப்பின் வலி கொடியது எனினும்
நினைவின் சேகரிப்பில் கொஞ்சம்
தேற்றிக்கொள்கிறது ஒப்பற்ற மனம்
சில கண்ணீர்த் துளிகளோடு.

நேற்றுள்ளவன் இன்றில்லை எனும்
நிலையாமையை மெய்ப்பித்து
யாவற்றிலும் விருப்பின்றி ஆனாலும்

பயணப்பட்டு வாழ்க்கையை
எப்படியோ வாழவைத்து விடுகிறது
இழப்பின் வலி உறையுமென
தேற்றுதல் சொல்லியே!



*கவிஞர் தெ. சுதா, குன்னத்தூர்*

# வசந்தகால பறவை

அரசமர உச்சியிலே
அசைந்தாடும் காற்றிலே
ஆடும் ஒரு தொட்டிலே
அதிலே தஞ்சம் கொள்ளுதே
அழகான பறவையே.



வாடகை இல்லா வீட்டிலே
வசதி இல்லா கூட்டிலே
ஆனந்தமாய் வாழுதே
அழகான மரக்கிளையிலே.
என்னதென்று சொல்லாது
சொந்தமென்று கொள்ளாது
சொத்து சுகம் அறியாது
பந்தமின்றி செல்லாது.

இயற்கையின் அழகிலே
இதமான நிழலிலே
இருவராக வாழுதே
இருக்கை விட்டு செல்லும் போது
ஐவராக செல்லுதே.

சாளரத்தில் பக்கமே
சத்தம் ஒன்று கேட்குமே
சந்ததிகள் பெருகிடவே
கூடு ஒன்று கட்டுமே
பாசத்துடன் பக்குவமாய்
இரையை சேய்க்கு ஊட்டுமே
இரைச்சலும் இசையாகுமே
செவிக்கும் இதம் ஆகுமே.

வருடந்தோறும் வந்துடும்
விருந்தினர் போல் தங்கிடும்
இன்று, வெற்றிடமாய் தெரிகிறது
வேதனையாய் இருக்கிறது
வேறு இடம் தேடாதே
வெறுமை என்னை ஆக்காதே

வசந்த கால பறவையே
வழி மறந்து போகாதே
விரைவில் வந்து குடியேறு
என் விருப்பம் அதை நிறைவேற்று.

கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# அட்சய திருதியை

சித்திர மாத வளர்பிறையில் வருமே
ஒரு மங்களகரமான நல்ல நாளாகுமே.
அட்சய திருதியை என்னும் அருமை நாளுமே

இந்நாளில் ஆதிசங்கரர் அளித்தாரே
ஒரு ஏழைப் பெண்ணிற்கு
தங்கத்தாலான நெல்லிக்கனியை
கனகதாரா ஸ்தோத்திரம் மூலம்
மஹாலக்ஷ்மி துதிக்க மழை போல் கொட்டியதே.

சிவனாரின் பிச்சாண்டவர் அவதாரத்தில்
அன்னபூரணி அவருக்கு அன்னமிட்ட நாளாகுமே.
சூரியனிடமிருந்து பஞ்சபாண்டவர்களுக்கு
அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரம்
கிடைத்ததும் இந்நாளே

எந்த பொருள் வாங்கினாலும்
பன்மடங்கு பெருகுமென்ற நம்பிக்கை உளதே .
நாம் மட்டும் வைத்துக் கொண்டால் போதுமா?
பிறருக்கு தானம் செய்ய வேண்டாமா?

நம்மால் தங்கம் வாங்க முடியவில்லை!
என்ற கவலை வேண்டாமே.
உப்பு, மஞ்சள் மகாலட்சுமி அம்சம் தானே!
இதை வாங்கி பூஜை அறையில் வைத்தாலே
மகாலட்சுமிக்கு பால் பாயசம் வைத்து
விளக்கேற்றி வழிபட்டால்



நமக்கு செல்வம் பல சேருமே!
எல்லாரும் எல்லாமும் பெற வேண்டுமே
இந்த நாளில் வாழ்க வளமுடன்!

*கவிஞர் அ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை*

# விட்டுவிடு

பொறுக்க முடியாமல் கூறும்
சில வார்த்தைகள் தான்.
நெருப்பாற்றில் சில துளிகளை
அள்ளித் தெளித்து விடுகின்றன

கொதிக்கும் நீர் அது
கொப்பளிக்கத்தான் செய்யும்
கொதிக்கும் வார்த்தைகளும்
பிரிக்கத்தான் செய்யும்



வார்த்தைக்குள் வட்டமிட்டு
வாழ்க்கைத் தேடினால்
இருக்கும் அமைதியும்
இல்லாமல் போகும்.
பொறுக்கும் குணமும்
புதைந்தே போகும்.

அவை
வெறும் வார்த்தைகள்தான்
வாழ்க்கை
அதையும் தாண்டி இருக்கிறது.

புலப்படாத காயத்திற்கு
காலமே மருந்து.
மன்னிக்க கற்றுக்கொள்
உறவெல்லாம் விருந்து.

உச்சி வெயிலில் நம் நிழலே
சொந்தமில்லாத பொழுது
வெறும் வார்த்தை என்ன செய்யும் ?
பொறுமை நின்று செய்யும்.
விட்டு விடு
அவை வெறும் வார்த்தைகள் தான்.

கவிஞர் சி முத்துராசன், அரியலூர்

# என்று விடியுமோ?

எத்தனை எத்தனை
அலைச்சல்.
எத்தனையோ
எண்ண அலைகள்

ஏகாந்த பார்வையில்
ஆழியும் நீண்ட மௌனத்தில்
அலைகளின் சப்தம் மீட்டுதோ
செவியருகில் சிலிர்த்த காற்றின்
உணர்வை.

மௌனத்தில் அமர்தலில்
ஒரு துளியும் மௌனமில்லை.
தலையே சுற்றும் அளவில்
எண்ணங்களும்
போராட்டங்களும்

விடுவிக்க முயற்சித்தும்
முயலாமையில் முடிந்த மனம்.
அடுத்த அடுத்த நாட்கள் கடக்க
வருடம் ஓடின.
வயதும் ஓடின.

புத்தகச்சுமை இறக்கி நாளாகிட
மீண்டும் மீண்டு எழுந்தன
எழுத்துக்கள் சுவையாக நாவோடு
அகத்தில் படிந்தும் படியாமலும்
சில பக்கங்கள்.



சிந்தித்தே சிலையாகின
நிகழ்.
நிரூபிக்க தடையின்றி
எதிர்.
விணாய் போன
இறப்பு.

எதிர்க்காற்றில் பெருமூச்சில்
நித்திரை குருகிய
நள்ளிரவில் பயத்தோடு கலந்த
பதற்றம்.
என்று விடியுமோ!

கவிஞர் சு. கார்த்திகா, பழநி

# தேவதைகளுக்கு வாழ்த்துகள்



பூவுலகை மழலை தொடும் முன்னரே
வயிற்றில் சுமந்த அன்னைக்கு வாழ்த்துகள்

அன்னையிடம் இருந்து வெளிவந்த சிசுவை
அன்னைக்கும் முன்னரே கரங்களில் ஏந்திய
செவிலியருக்கு வாழ்த்துகள்

புதிதாய் வந்திடும் மழலைகளைக்
காத்திட வந்த தேவதைகளும் இவர்களே
இரு தேவதைகளும் இன்புற்று

இப்புவியில் வாழ்ந்திட வாழ்த்துதிந்த மனமும்
இறைவனால் படைத்திட்ட இறைவிகளும்
இவர்களே என்று கூறுவதில் மிகையில்லையே!

புன்னகையுடன் வலம் வந்து
புது நம்பிக்கையைப் புகுத்திடுவார்களே
அன்புடனே அரவணைத்து ஆதரவாய் தலைக்கோதி
அரவணைக்கும் அற்புதமானவர்களும் இவர்களே

இரு தேவதைகளுக்கும்
இனியதோர் வாழ்த்தைத் தெரிவிப்போம் நாமுமே!

அன்னைக்கு அன்னையர் தின நல்வாழ்த்துகள்
செவிலியருக்கு செவிலியர் தின நல்வாழ்த்துகள்

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# மாலவனும் வைணவமும்

## பகுதி 33 ஆண்டாள் தொடர்ச்சி 3

இராதாவின் பக்திதனை மேலதுவாய் வடவர்கள்
போற்றுவரே! மீராபாய் அர்ப்பணிப்பு போற்றர்க்கு
உரியதுவாம்! மலையப்பர் கருடசேவை வில்லிபுத்தூர்
ஆண்டாள்தன் மாலையது சேர்ந்திடுமே! துழாயதுவும்
செவ்வந்தி சம்பங்கி நிறநேர்த்தி வாசம்நிறை
மாண்மாலை! ஆண்டாள்தன் திருக்கல்யாண உத்சவத்தே
வேங்கடவர் மாலையது வில்லிபுத்தூர் சேர்ந்திடுமே!
மதுரைநகர் மாண்சித்திரை திருவிழாவில் கள்ளழகர்
ஆண்டாளின் மாலைதனை சூடிடுவார்! அன்னாளின்
எழிற்கொண்டை சிகைதன்னின் அலங்காரம் கேரளத்து
நம்பூதிரி அமைப்பதனின் எழில்கூடி அமைந்திடுமே!
ஆண்டாளின் இடக்கையில் கிளியமைப்பு நாடோறும்
புதுவதுவாய் அமைந்திடுமே! செய்திடவே மணிநான்கும்
நான்கரையும் ஆகிடுமே! மாதுளம்பூ குச்சிமூங்கில்
வாழையிலை நல்நந்தியா வட்டையிலை இன்னவைகள்
சேர்க்கையதாம்! ஆண்டாள்தன் பாடல்கள் திருப்பாவை
முப்பதுடன் நாச்சியார்தம் திருமொழியாம் நூற்றோடு
நாற்பத்து மூன்றமைவே! இலக்கியத்தின் செழுமையதும்
தத்துவமும் பக்தியதும் நிறைந்தமைந்த தன்மைத்தே!
வாரணங்கள் ஆயிரம்பா ஜெயதேவர் "கீதகோவிந்தம் "
ஒப்பாமே! வைணவர்கள் வடகலையோ தென்கலையோ
இல்லத்தும் ஆலயத்தும் நாளெல்லாம் விழாநாளில்
மார்கழியில் வடமொழிதன் நான்மறைக்கு ஈடாக
திருப்பாவை இடம்பெறுமே! கோதைபேர் மண்டலியாம்
சீரமைப்பு ஆயிரத்து தொளாயிரத்தின் எழுபதுதனில்
தொடங்கிற்று! பனிரெண்டு ஆண்டுகள்பின் பதிவானது!
ஊடகங்கள் யாவினிலும் பரப்புவதே இலக்காகும்!
பூமாலை சூடிகொடுத் தாளாம்பா மாலையை
பாடிபடைத் தாள்சீரெலாம் தொடர்வோமே! தெய்வநிலை
உற்றாளை வாழ்விலக்கு கண்டாளை போற்றுவமே!



கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# செவிலியர் எனும் செய்தவத்தோன்றல்

செவிலியர் தெய்வத்தால்
படைக்கப்பட்ட உன்னத தாய்
செவிலியர் எனும் செய்தவத்தோன்றல்
வெண்மை ஆடையும் மகிழ்ச்சி கொள்ளும்
வெள்ளம் உள்ளம் கொண்ட
செவிலியர் உடலில் தன்னை அணியும் பொழுது.
குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய்க்கு
நிகரான தாயாக செவிலியர் எனும் செய்தவத்தோன்றல்

பல நோய்களைக் கண்டு அஞ்சாமல் தன் மனதிற்கு அஞ்சி
மனதாரப் பணி புரியும் செவிலியர் எனும் செய்தவத்தோன்றல்
எளியோர்களின் தோழனாக எளிமையின் உருவமாக
பணியில் கண்ணியத்தை வெளிக்காட்டும்
முகமறியா உறவு செவிலியர் எனும் செய்தவத் தோன்றல்
பயத்துடனும் பதட்டத்துடன் வரும் நோயாளிகளை
பணிவுடன் கவனித்து பணிவிடைகள் செய்து
பக்குவமாக பார்த்து அனுப்பும் தெய்வத் தாயின் பிள்ளைகள்
செவிலியர்கள் எனும் செய்தவத் தோன்றல்

காலை முதல் இரவு வரை அங்கும் இங்குமாய் ஓடி
மனிதனின் இதயத்துடிப்பை நிற்காமல் ஓட வைக்கும்
செவிலியர் எனும் செய்தவத் தோன்றல்
மூன்று வேலை உணவு இடைவேளையும் குறைத்துக் கொண்டு
நோயாளியின் உபாதையை குறைக்கும்
செவிலியர் எனும் செய்தவத் தோன்றல்

கைகளைப் பிடித்து அழைத்துச் செல்லும் தாயாக
நாடியை பார்த்து இதயத் துடிப்பை கவனித்து
உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கும்
செவிலியர் எனும் செய்தவத் தோன்றல்
இறைவனே கைவிட்டாலும் இமைகளை விலக்கி
கண்களைப் பார்த்து உயிர்களை மீட்டெடுக்கும்
அற்புதப் பிறவி செவிலியர் எனும் செய்தவத் தோன்றல்

வணங்குவோம் வாழ்த்துவோம் மதிப்பளிப்போம்
சேவைத்தாயின் பிள்ளையாய்
இப்பூமியில் பிறந்த வெள்ளை மனம் கொண்ட செவிலியர்களை.



கவிஞர் ரெ. முரளீதரன், மயிலாடுதுறை மாவட்டம்

# சாலை விதிகள்

சொர்க்கத்திற்கோ
அல்லது
நரகத்திற்கோ
மிக அருகில்தான்
செல்கிறது,
போக்குவரத்து நெடுஞ்சாலைகள்.

சொர்க்க பூமியில்
வாழலாம்,
நாம் அனைவரும்
சாலை விதிகளை
மதித்து சென்றால்.




கவிஞர் அ. செல்வராஜ், உடுமலைப்பேட்டை

# தோல்வி கண்டு துவளாதே!

ஆர்வமுடன் மாணவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த
தேர்வு முடிவுகள் வெளியான தருணமிது!
மனனம் செய்து மதிப்பெண்கள் பெறுவதை
மாணவர்கள் மீது திணிக்கின்ற கல்விமுறை!
மனமுடைந்து போகின்றார் மதிப்பெண் குறைந்தாலே!
தோல்வி அடைந்தவர்கள் துவண்டு போகின்றார்!
தாளொணாத் துயரத்தில் தற்கொலைக்கும் துணிகின்றார்!
நல்லதொரு கல்விமுறை நம்பிக்கையை வளர்த்து
எல்லாச் சூழல்களையும் எதிர்கொள்ள கற்பிக்கும்!
பள்ளிக் கல்வியொன்றே வாழ்வில் எல்லையில்லை!
உள்ளுக்குள் ஒளிந்திருக்கும் திறன்களைக் கண்டறிந்தால்
ஒளிமயமான எதிர்காலம் அனைவருக்கும் உண்டாகும்!
சலிப்பையும் வலியையும் உண்டாக்கி பிள்ளைகளை
உள்ளத்தளவில் ஊனமாக்கும் வலியுடன் வாழ்வின்
விளிம்பில் ஒடுக்கிடும் நிலைமாற வேண்டுமிங்கே!
மனமுடைந்த மாணவர்கள் தற்கொலைக்கு முயல்வதும்
காணாமற் போவதும் அதிகரித்தல் காண்கின்றோம்!
தன்பிள்ளையின் திறனறிந்து ஊக்குவித்து எதையும்
திணிக்கின்ற எண்ணமின்றி பெற்றொர்கள் செயலாற்ற
மனமாற்றம் விளைவிக்கும்! தனித்திறன் கொண்டோர்க்கு
கனிந்திடும் எதிர்காலம்! தோல்விகண்டு துவளாமல்,
மனமுடைந்து இன்னுயிரை மாய்க்கும் வழிதேடாமல்
இன்னும் எத்தனையோ வழிகளுண்டு முன்னேற
என்றெண்ணி முயன்றிடுக! வெற்றிக்கனி கரங்களில்
தானாக வந்துவீழும்! உனைப்போற்றும் நல்லுலகம்!
தன்னம்பிக்கை கொண்டு தளராமல் முயன்றால்
மாணவர்களால் இவ்வுலகில் மாற்றங்கள் உருவாகும்!

*கவிஞர் சு. சீ. சேஷாத்ரி*

# ஆகாயத்தில்

## சிறு நவீனம்

## அத்தியாயம் -6



விமானி குமார், மூன்றாவது முறையாக பாத்ரூமிலிருந்து வயிற்றைத் தடவிக் கொண்டு வெளியே வந்தவாறு "நேற்றுக் குடித்த ரம் சரியில்லை என்று நினைக்கிறேன்." என்று எண்ணிக்கொண்டார்.

"வனிதா ஏர்ப்போர்ட் அதாரிட்டிக்கு ஒரு போன் பண்ணி இன்று நான் வர முடியாது என்று சொல்லிவிடு. வயிற்று வலி மிகவும் கஷ்டப் படுத்துகிறது" என்றார்.

"என்ன டியர் ரொம்ப கஷ்டமாக இருந்தால் டாக்டரிடம் போய் வரலாமா?" என்று கேட்டாள் குமாரின் மனைவி வனிதா.

வேண்டாம் வனிதா. ரெஸ்ட் எடுத்தால் எல்லாம் சரியாகப் போகும்" என்றவர் திரும்பவும் வயிற்றை பிடித்துக் கொண்டு பாத் ரூமுக்குள் ஓடினார்.

வனிதா போனை எடுத்து டயல் பண்ணி "ஹலோ, மிஸ்டர் பிரேம்சந்தைக் கூப்பிடுகிறீர்களா?" என்றாள்

"ஒரு நிமிடம் லைனில் இருங்கள்" என்றது எதிர் முனையில் ஒரு மின்னல் குரல்"

"ஓ.கே"

"ஹலோ மிஸ்டர் பிரேம் சந்த் லைனில் இருக்கிறார் பேசுங்கள்"

"ஹலோ சார் நான் மிஸஸ் குமார் பேசுகிறேன்"

ஹாய் எப்படியிருக்கீங்க?"

"நன்றாக இருக்கிறோம்" "சரி என்ன விஷயம்? ஆமாம் குமார் எங்கே? இன்னும் காணோம் இன்னும் ஒரு மணி நேரத்திலே குவைத்திற்கு போகின்ற விமானத்தை மேலே ஏற்றி ஆகணுமே"

"அதற்காகத் தான் சார் போன் பண்ணினேன்"

"என்ன ஆச்சு?"

திரு இரஜகைநிலவன்

## சிறு நவீனம்

## அத்தியாயம் -6

திடீரென்று வயிற்றுவலி என்றார் இப்போது கூட பாத்ரூமில் தான் இருக்கிறார்"

"பொய் சொல்லவேண்டாம். திடீர் மூட் வந்து ரெண்டுபேரும் பிக்னிக் போறீங்களா?

அப்படியெல்லாம் இல்லை சார் "

"வனிதா ஒரு நிமிடம் குமாரிடம் போனைக் கொடுங்கள்"

"சார் அவர் பாத்ரூமில் இருக்கிறார்"

"இதோ பாருங்கள் வனிதா இன்றைக்கு வரக் கூடிய மூன்று பைலட்டுக்களும் இன்னும் வரவில்லை.

குவைத் விமான சர்வீசைக் கான்சல் பண்ணவும் முடியாது. குமார் வந்து விட்டால் நான் சமாளித்துக் கொள்வேன்" என்றார் பிரேம்சந்த்.

"அது வந்து...." என்று வனிதா சொல்லிக் கொண்டிருக்கும் போதே அடுகில் வந்த குமார் "போனை இப்படிக் கொடு" என்று வாங்கி "சார் நான் விமானி குமார் பேசுகிறேன்" என்றார்.

"ரொம்ப நல்லதாகப் போச்சு குமார் ஏற்கனவே சிங், ரட்சகன், நிகில் மூன்று பேறும் விடுமுறையில் இருக்கிறார்கள். அது போக இன்று காலையில் இன்னும் மூன்று விமானிகள் விடுமுறை சொல்லிவிட்டார்கள். இப்போது நீங்கள் வராவிட்டால் நான் குவைத் சர்வீசை கேன்சல் பண்ணவேண்டிய சூழ்நிலைதான்"




கொஞ்சம் தெம்பாக உணர்ந்த குமார், "பரவாயில்லை சார் நான் உடனடியாக புறப்பட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு போனை வைத்தார்.

...தொடரும்

திரு இரஜகைநிலவன்

# வசந்தகால விண்மீன்கள்

## புத்தக அனுபவம் — கவிதைத் தொகுப்பு




**அசோக் சித்து**
**வெளியீடு மின் கவி**
**தொடர்புக்கு 9626227537**
**பக்கம் 110; விலை ரூ 150**
**முதல் பதிப்பு மே 2024**

தமிழ் இலக்கிய உலகம் ஆரம்ப நிலையில் இருந்து இன்று வரை வெவ்வேறு பரிணாமங்களை எடுத்து வருகிறது. சங்க இலக்கியங்களாகட்டும் அதன் பிறகு வந்த இடைக்கால இலக்கியங்களாகட்டும் இன்றைய நவீன கவிதைகளாகட்டும் எல்லாவற்றிலும் மனங்களின் ஆளுமை வெளிப்படுத்தப்படுகிறது.

எழுத்தாளர் தான் எண்ணிய கருத்தை எளிய நடையிலும் எழுதிப் பழகலாம் அல்லது அகராதியைக் கொண்டு பொருள் புரிந்து வாசிக்கும்படியான கடின நடையிலும் இலக்கியங்களைப் படைக்கலாம். சங்க இலக்கியங்களைப் புரிந்து கொள்வதற்கு இலக்கணங்கள் மற்றும் அவற்றின் முழுமையான வடிவங்களை நாம் உணர்ந்து கொள்ளுதல் அவசியமாகிறது. ஆனால் தொடர்ச்சியான பயணத்திலும் அறிவியல் யுகத்தின் நீண்டு கொண்டிருக்கும் கால வெளியின் ஓட்டத்திலும் இன்று வாசிப்பை நோக்கி நகரும் சூழல் இல்லாத காலகட்டத்தில் இலக்கணங்களின் மீதான ஆர்வமும் இலக்கியங்களை வாசிப்பதற்கான நேரமும் குறைந்து வரும் சூழலில் நவீன கவிதைகள் நேரடியான பொருளை வாசிப்பவருக்குக் கொடுத்து விடுகின்றன.

அந்த வகையில் காதலும் தத்துவமும் இரண்டறக் கலந்தும் அன்றாட வாழ்வின் பாடுகளை உட்பொருளாகக் கொண்டும் சமூக சீர்கேட்டில் உழன்று தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்ள இயலாத மனிதர்களின் இயலாமை குறித்தும் சமூகச் சீர்கேடுகளில் சிக்கித் தவிக்கும் வறுமை மனிதர்களைக் குறித்தும் எண்ணக் குமுறல்களை கவிதை என அமைத்துத் தந்திருக்கிறார் அசோக் சித்து அவர்கள்.

*திரு இளையவன் சிவா*

# வசந்தகால விண்மீன்கள்

## புத்தக அனுபவம் கவிதைத் தொகுப்பு

வசந்தகால விண்மீன்கள் என்ற இந்த தொகுப்பில் உள்ள 70 கவிதைகளில் சரிபாதியாக காதல் இடம் பெற்று இளைஞனின் மனதிற்குள் காதல் எப்படியெல்லாம் நுழைந்து விடுகிறது அப்படி நுழையும் காதல் அவனை எப்படியெல்லாம் அனுதின நகர்வில் பாடாய்படுத்துகிறது என்பதை சமூகத்தின் போக்குடனும் தீண்டாமையின் வலி மிகுந்த தருணங்களோடும் பதிவு செய்கிறது.

கவிதைகளுக்குள் மறை பொருட்களை நுழைத்து வாசிப்போரைத் திண்டாட விடாமல் நேரடியான விளக்கபென கவிதைகளைவழங்கிவிடுகிறார். நாமும் அவை உணர்த்தும் சிந்தனைகளுக்குள் மயங்கி நின்றுவிடாமல் அடுத்த நிலையை நோக்கி நகர்வதள்கான வெளியையும் ஏற்படுத்திவிடுகிறார் கவிஞர்.

எனக்குப் பிடித்த சில கவிதைகளைப் பட்டியலிட எண்ணுகையில் மொழியின் வளம் எவ்வாறெல்லாம் சிந்தனையை வளர்த்தெடுக்க உதவுகிறது என்பதை மகிழ்வுடன் உணர வழி தருகின்றன இந்நூலின் கவிதைகள்.

*விடுதலை
கூலி வேலை செய்யும்
பெண்களிடம்
பெண் விடுதலையைப் பேசினேன் நிசப்தமானார்கள் பிறகு
சத்தமாய் சிரித்தார்கள்

*நிகர எடை
தங்கத்தை விட மதிப்பு மிக்கது உழைப்பாளர் உழைப்பு
நிகர எடை தெரியாமல்
அடகு வைக்கப்படுகிறது
முதலாளிகளிடம்

திரு இளையவன் சிவா

*நடைமுறை
உழைப்பவனுக்கு
ஊறுகாய்
உறங்குபவனுக்கு
பிரியாணி
மனிதனைப் பார்த்து
சிரிக்கிறது இயற்கை

*நினைவுப் பரிசு
உழைப்பாளர்களுக்கு
திருவோடும்
முதலாளிகளுக்கு
தங்கத் தட்டும்
நினைவுப் பரிசாக
அறிவிக்கப்பட்டது
உழைப்பாளர் தினத்தில்

*பசி
பசியோடு வாசலில்
காவலாளி
மொட்டை மாடியில்
காகத்திற்கு
நெய் சோறு

*சுரண்டல்
முதலாளிகள் விட்டு வைத்த
தொழிலாளர்களின்
கொஞ்சநஞ்ச ரத்தத்தையும்
குழாய் போட்டு
உறிஞ்சி விடுகின்றன
கொசுக்கள்

*தேடல்
தன்னைத்தானே
பூட்டிக் கொண்ட சிலர்
சாவியை
கோவில் கோவிலாக
தேடுகிறார்கள்

*பசி
பசியோடு வாசலில்
காவலாளி
மொட்டை மாடியில்
காகத்திற்கு
நெய் சோறு

*நந்தவனம்
உள்ளம் சிவந்த
என்னவளின்
எண்ணம் சுமந்து
சென்றேன்
நடுநிசியும்
நந்தவனமானது

*குடையின்றி மழையில் நீ
சாலையில் நடந்தாய்
உன்மேல்
பட்டுத்தெறித்த
மழைத்துளிகள்
புதிதாய் பிறந்து
சாலையில் ஓடியது
தங்கக் காசுகளாய்

திரு இளையவன் சிவா

*ஆழ்துளைக் கிணறு
ஆழ்துளைக் குழாயில்
அடித்த தண்ணீரில்
கைகளில்
தாங்கிப் பிடித்தேன்
மிதந்தது
குழந்தையின் முகம்

வறுமையின் தாண்டவத்தில் வசிக்கும் சூழலிலும் தனது கனவுகளை பசியின் நீள் கொடுமைக்குத் தின்னத்தராமல் நம்பிக்கையின் கரம் பிடித்து வாழ்வை எதிர்கொள்ளும் தனது அன்றாடப் பிரச்சனைகளைக் கண்டு மனம் தளராது சமூகத்தின் போக்கை மாற்றமுடியும் என்ற உறுதியில் கவிதையைக் கையில் எடுத்திருக்கும் அசோக் சித்து அவர்கள் மொழிச்சுரங்கத்தில் எழுத்துப் புதையல்களை அள்ளிவந்து நமக்குப் பரிசாக்கியிருக்கிறார்.

காதலைக் கடந்து சமூகத்தைக் கடைந்து சமத்துவத்தின் பாதையை அடையப் பார்க்கும் கவிஞருக்கு தமிழ் துணை நின்று வெற்றி அளிக்கும் என்ற நம்பிக்கையில் நகர்பவருக்கு இன்னும் ஏராளமான சொற்கள் காத்திருக்கின்றன உலகெங்கும் சிந்தனைகளை விதைப்பதற்கு. எல்லாக் காலமும் கவிதை வானில் வசந்தத்தைப் பிரசவிக்கும் விண்மீனாய் ஒளிர்ந்திட வாழ்த்துகள்.



திரு இளையவன் சிவா

# இமைப்பறவைகளின் சலனங்கள்

## புத்தக அனுபவம் — கவிதைத் தொகுப்பு

வான் மழை எப்படி மண் தளர்த்தி நிலம் புகுந்து வேரை ஈரமாக்குகிறதோ, அப்படித்தான் காதலும் மெல்ல நுழைந்து நெஞ்சை ஈரமாக்கி, தேகத்தை குளிரூட்டி நினைவுகளால் அற்புத மாயங்கள் செய்யும் ஒரு மந்திரச் சக்தி.

இத்தொகுப்பு முழுவதும் என் அன்பு தோழமை இரஜகை. நிலவன் அவர்கள் படங்களுக்காகக் காதலை கவிதைகளைச் சமைத்திருக்கிறார். திருவிழாக்களின் கொண்டாட்டங்களைக் கொண்டாடி மகிழும் குழந்தையைப் போல இத்தொகுப்பு முழுவதும் காதலைக் கொண்டாடி தீர்த்திருக்கிறார். தாவணி அசைவதையும், கண்ணின் நடனங்களையும், காதல் மொழிப் பேசும் கன்னியர்களையும் பற்பல உவமைகளுக்குப் பொருத்தி காதலை உவமைகளால், படிமங்களால் அழகாக அலங்கரித்து இருக்கிறார்.




மனிதன்மட்டும் காதல் செய்வதில்லை. உயிர்களாகப் பிறக்கின்ற, இருக்கின்ற எல்லாவற்றிற்கும் காதல் உண்டு. அப்படிப் புரிந்துகொள்ளும்போது காதல் இன்னும் இயற்கையோடு சேர்ந்து அழகாகி விடுகிறது. இவர் கவிதைகளின் பல வரிகள் பூச்சூடி தன்னை கண்ணாடி முன்னின்று பார்த்துப் பார்த்து தன்னைத்தானே காதலே ரசித்துக்கொள்ளும் கவிதைகள் இவை என்று சொல்லும் அளவிற்கு மிக அழகாக உள்ளன.

சந்தேகிக்கும் நிலவு
சரிபார்க்கும் ஆதவன்.
சரியாக ஒப்பனைகளில்
சகல விண்மீன்கள்

*திரு கா. பாபுசசீந்திரன், நிறுவனர், நிமிர் இலக்கிய வட்டம் மற்றும் நிமிர்ப் புத்தகப் பட்டறை*

என்று வரிகள் மூலம் பெண்ணுக்குரிய அழகிய குணமாக, தான் விரும்பும் ஆடவன் தனக்கு மட்டுமே சொந்தமானவன் என்று எண்ணுகின்ற நோக்கில் நிலவு ஆதவனைச் சந்தேகிக்கிறது என்று எழுதும்போது இயற்கையில் காதலையும், காதலில் இயற்கையையும் கொண்டுவருகிற சூட்சுமத்தை இக்கவிதைக்குள்ளே பொருத்தி விடுகிறார் கவிஞர். பொதுவாகப் பெண்கள் ஒப்பனைச் செய்துகொள்வது வழக்கம். அப்படி, இங்கே விண்மீன்களைப் பாருங்கள் சரியான ஒப்பனைகளில் இருப்பதாகக் கவிஞர் கூறுகிறார் அதனால்தானோ என்னவோ அவை மின்னுகின்றன.

"மாண்புமிகு அன்பிற்கு
மாற்றம் உண்டோ?...
மாறாத எண்ணங்கள்
மாசற்றவை மறவாதே"

அன்பின் மாண்பைச் சொல்லும் பொழுது இவரும், இவருடைய வரிகளும் அழகாகி விடுகின்றன. மாண்புமிகு அன்பிற்கு மாற்றங்கள் உண்டா, மாறாத எண்ணங்கள் மாசற்றவை என்று சொல்லுகின்ற இவருடைய வரிகளுக்குள்ளே எத்துணை எதார்த்தமும், உண்மையும் அடங்கியிருக்கிறது என்பதை உணர முடிகிறது. இப்படியே இவ்வார்த்தைகள் போலவே, இவ்வரிகள் போலவே, இக்கவிதைப் போலவே வாழ்க்கை அமைந்துவிட்டால் வேறென்ன வேண்டும் இந்த உலகில் என்று நினைக்கத் தோன்றுகிற வகையில் இவருடைய கவிதை அமைந்திருக்கிறது.

"நீலவானின் மேகங்கள்
நீள்கம்பிகளின் மழையாகுமே.
நீண்ட கரங்களில்
தானமும் உயர்வாகுமே"

## புத்தக அனுபவம் கவிதைத் தொகுப்பு

இவ்விரண்டு கவிதைகளிலும் இயற்கையைப் படம்பிடிக்கும் ஒளிப்பட கலைஞராகக் கவிஞரின் வரிகள் மிளிர்கிறது. மழையை நீர்க்கம்பிகளாகவும், நீளும் கைகளாகவும் பார்க்கும் இவரின் கற்பனை, உவமை வெகு அபாரம்.

"இரக்கமில்லா இதயத்தை
இன்னும் திறக்கவில்லை.
இறங்கி வந்தேன்
இதழ்களும் பேசவில்லை."

இரக்கமில்லாத இதயத்தைக் குறித்து பேசும் இக்கவிதைகளின் வழியே இவர்த் தனக்கென்று ஒரு இடத்தைப் பிடித்து விடுகிறார். இவ்வரிகளில் வழியே நமது நெஞ்சத்தையும் கவித்துளிகளால் ஈரமாக்கி விடுகிறார்க் கவிஞர்.




இப்படி இளமைத்ததும் இவரின் காதல் வரிகளால் கல்லும் காதல் கொள்ளும், மண்ணும் மகிழ்ச்சி கொள்ளும் இவர் நிறைய எழுத வேண்டும் இது போன்ற காதல் அத்தியாயங்களைப் புதுப்புது கற்பனைகளோடு பல புதுக்கவிதைகள் படைக்கவேண்டும், இவரின் படைப்புகள் யாவும் பார்ப் புகழ் போற்ற வெற்றிபெற என் அன்பு தோழமை கவிஞர். இரஜகை நிலவன் அவர்களை வாழ்த்துகின்றேன், பாராட்டி மகிழ்கிறேன்.

*திரு கா. பாபுசசிதரன்,* நிறுவனர், நிமிர் இலக்கிய வட்டம் மற்றும் நிமிர்ப் புத்தகப் பட்டறை

# பா. வே. மாணிக்க நாயக்கர்

## கட்டுரை

### பிறப்பு, கல்வி



சேலத்திலுள்ள பாகல்பட்டியில் ஜமீன்தார் வேங்கடசாமி நாயகர் - முத்தம்மாள் இணையருக்கு பிப்ரவரி 2, 1871-ல் பிறந்தவர் பா.வே. மாணிக்க நாயகர். சேலத்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தார். வீட்டிலேயே ஆங்கிலப் பேச்சுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் சேலம் கல்லூரியில் எப்.ஏ.யும் (விஞ்ஞானம்) பயின்றார். சென்னை கிண்டி பொறியியல் கல்லூரியில் பொறியியல் படிப்பு பயின்றார்.அங்கு மாநிலத்திலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று தங்கப் பதக்கம் பெற்றார்.

### தனிவாழ்க்கை

நாயகருக்கு மூன்று மனைவிகள், 6 குழந்தைகள். 1896-ல் தமது 24-ம் வயதில் பொதுப்பணித் துறையில் கட்டுமானப் பொறியாளராகப் பணியில் சேர்ந்து 1919-ம் ஆண்டு செயற்பொறியாளராகப் பதவி ஏற்றார் அத்துறையில் கண்காணிப்புப் பொறியாளராகப் பதவி உயர்வு பெற்றவர் பின்னர் 1927-ம் ஆண்டு அரசுப்பணியில் இருந்து ஓய்வுப் பெற்றார். மேட்டூர் கட்டுமான வரைவை வகுத்தவர்களில் ஒருவர். 1911-ல் இங்கிலாந்து மான்செஸ்டருக்கு மேற்படிப்பிற்காகச் சென்றபோது காங்கிரீட் கட்டிடம் பற்றிப் படித்தார். 1913-ல் சென்னையில் காங்கிரீட் கட்டிடத்தை அறிமுகப்படுத்தினார்.

திரு அ வில்சன், இதழாசிரியர்

## இலக்கிய வாழ்க்கை

1922-ல் தமிழ் ஒலி இலக்கணம் பற்றியும், பொதுத்தமிழ் வரி இலக்கணம் பற்றியும் இரண்டு சிறு பிரசுரங்களை வெளியிட்டுள்ளார். இவற்றில் செந்தமிழ் இலக்கணம் இயற்கையாக நிகழும் ஒலிக்குறிப்புகளையும் (முணுமுணுத்தல், பொருமுதல், திக்கல்) கணக்கில் எடுத்துக் கொண்டு எழுதப்பட்டது. தமிழ்ச்சொற்களின் வேர்கள் இயற்கை சார்ந்து ஒலிகளாக இருப்பதும், ஓசை இலக்கணத்திற்கும் தமிழ்ச் செய்யுள் இலக்கணத்துக்கும் தொடர்புண்டு என்றும் நிறுவினார். The Tamil Alphabet and its Mystic Aspect என்ற நூலை தமிழிலும் மொழியாக்கம் செய்துள்ளார். தமிழ் எழுத்துக்களுக்கு மறைஞானப் பண்புண்டு என வாதிடுகிறார். 'பொதுத்தமிழ் வரியிலக்கணம்" என்ற நூல் தமிழ்ப் பண்பாடு சார்ந்து இலக்கணத்தை விளக்கும் சிறுநூல். ஒரு மொழியின் இலக்கணமும், சொற்களின் கூட்டமும் அந்த மொழி பேசும் மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும்; ஒரு பகுப்பாரின் ஆரம்பப்பேச்சுமொழிக்கும், நாகரிகத் தோற்றத்திற்கும் தொடர்புண்டு என்பதை இதில் விளக்குகிறார். செந்தமிழ்ச் செல்வி இதழின் ஆசிரியர் குழுவில் பங்குபெற்றார். அதில் 48 தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் அந்த இதழில் எழுதினார்.

## உரைகள்

நாயகர் அக்காலத் தமிழ்ச் சங்கங்களிலும், கல்லூரிகளிலும் உரையாற்றியிருக்கிறார். அவை அப்போதைய இதழ்களில் வெளியாகியுள்ளன. 1919-ல் திருச்சியில் நடந்த தமிழ்ப் புலவர் மாநாட்டில் தமிழ் ஒலி குறித்தும், தமிழில் பிறமொழிக் கலப்புக்கு எதிர்ப்புத்தும் உரையாற்றினார். 1920-ல் சேலம் கல்லூரிகளில் இவர் பேசிய பேச்சு செந்தமிழ்ச் செல்வியில் வந்தது. 'தமிழகம் நிலவியல்படி பழமையானது' என்பதை உலக வரலாற்றிலிருந்து மேற்கோள் காட்டிப் பேசினார். தொல்காப்பியர் மூங்கிலைப் புல் வகையில் சேர்த்தது இதன் பழமைக்குச் சான்று என்பதைச் சில காரணங்கள் மூலம் விளக்கினார்.

திரு அ வில்சன், இதழாசிரியர்

1927-ல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 'எல்லாம் ஐந்தே' என்ற தலைப்பில் இவர் பேசிய பேச்சு செந்தமிழ்ச் செல்வியில் வந்தது. இதில் உலகம் ஐந்து பகுப்பாக இருப்பதுபோல் உடலும் ஐந்து பகுப்புடையது என்று விளக்கினார். காலிலிருந்து இடுப்பு வரை நிலத்தன்மை, இடுப்பிலிருந்து நெஞ்சுவரை நீர்த்தன்மை, நெஞ்சிலிருந்து தோள்வரை நெருப்புத் தன்மை, தோளிலிருந்து மூக்குவரை காற்றுத்தன்மை, மூக்கிலிருந்து தலை வரை ஆகாயத்தன்மை உள்ளது என்பதை விளக்கி, இவை பிறப்பால் மாற்றமில்லாதது என்று முடித்தார். இவ்வுரைகள் அன்று பெரிதும் விவாதிக்கப்பட்டன.

### நூல்கள்

#### ஆங்கிலம்

- The Tamil Alphabet and its Mystic Aspect
- The Evolution of Intellect in Coordination with Form

#### தமிழ்

- பொதுத்தமிழ் வரியிலக்கணம்
- திராவிட நாகரிகம்
- தமிழ்வகைத் தொடர் தொல்காப்பிய ஆராய்ச்சி
- தமிழ் ஒலியிலக்கணம்
- கம்பன் புகழும் வால்மீகியின் வாய்மையும்
- தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்[1]
- தமிழலகைத் தொடர்
- தமிழ் மறை விளக்கம்

### மறைவு

டிசம்பர் 12, 1931-ல் தன் அறுபது வயதில் மாணிக்க நாயகர் இரத்த அழுத்த நோயால் நீலகிரி மாவட்டம் குன்னூரில் இருந்த போது காலமானார். இவரது சமாதி மயிலாப்பூரில் உள்ளது.

*திரு அ வில்சன், இதழாசிரியர்*

# நாளை நமதே

வெற்றி என்பது
உன்னை உலகிற்கு
அறிமுகம் செய்வது.
தோல்வி என்பது
உன்னை உனக்கே
அறிமுகம் செய்வது.

அகமும் தமிழே

முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :

9597887847
8870884969




# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com